--

<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.</u>
<u>அசல் வழக்கு எண்</u>.224/2022

பெயர்-திரு.குப்புசாமி நாள்.28.07.2025

வா.சா.2 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**வா.சா.2 : பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை-**

வாதி தேவராஜ் எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது பக்கத்து ஊர்காரர். தாவா சொத்திற்கும் எனது வீட்டிற்கும் 3 கிலோ மீட்டர் தொலைவு இருக்கும். நான் தற்போது தொழில் எதுவும் செய்யவில்லை நான் படிக்கவில்லை. எனது பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பட்டா எண், தேதி, கிரைய தேதி, ஆவண எண், விஸ்தீரணம் நான் சொல்லி எழுதப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி விவரங்களை யார் சொன்னார் என்று எனக்கு தெரியாது. பிரமாண வாக்குமூலத்தை நான் படித்து பார்க்கவில்லை என்றால் சரிதான். வாதி தேவராஜ் பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பற்றி நேரடியாக தெரியாது. அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்தில் யார் விவசாயம் செய்தார்கள் என்றால் வாதி தேவராஜூம் பிரதிவாதிகள் பெருமாள், துரைசாமி சேர்ந்து விவசாயம் செய்கிறார்கள். பெருமாள், துரைசாமி 3 ஏக்கர் அளவு சொத்தில் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். வாதி சொத்தை பிரதிவாதிகள் விலைக்கு கேட்டார் என்றால் விவரம் எனக்கு தெரியாது. வாதி சொத்தில் பிரதிவாதிகள் 25.10.2022 தொந்தரவு செய்தார்களா என்றால் தெரியாது. நான் தாவா சொத்திற்கு பக்கமாக உள்ளேனா என்றால் இல்லை. வாதி தேவராஜ் கேட்டதால் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். வழக்கு சங்கதிகள் தெரியாமல் வாதி என்க்கு தெரிந்தவர்கள் என்றால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான்.

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA — Digitally signed by SELVAM SUSILA Date: 2025.07.28 15:02:26 +0530

District Munsif